பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

20 05 2025 TUESDAY 6.30 PM

## மாநிலச் செய்திகள்

### தலைப்புச் செய்திகள்

- அனைவருக்கும் தரமான மருத்துவ சேவைகள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் பல்வேறு சுகாதார திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- பொருளாதார வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் வர்த்தக சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

- சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரியில் இன்று தனியார் கல் குவாரியில் பாறை மற்றும் மண் சரிந்து விழுந்த விபத்தில் ஐந்து பேர் உயிரிழந்தனர்.

- தென்மேற்கு பருவமழை அடுத்த சில நாட்களில் தொடங்குவதற்கான சூழல் நிலவுவதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

- உலகக்கோப்பை இளையோர் துப்பாக்கிச்சுடும் போட்டியில், இந்தியாவின் Adriyan Karmakar வெள்ளிப்பதக்கம் வென்றார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<>>>>>

அனைவருக்கும் தரமான மருத்துவ சேவைகள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் பல்வேறு சுகாதார திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் நடைபெற்ற உலக சுகாதார அமைப்பின் கூட்டத்தில் காணொலி மூலம் உரையாற்றிய அவர், இந்தியாவில் ஆயுஷ்மான் பாரத் போன்ற விரிவான சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

நாட்டில் 58 கோடி பேர் சுகாதார காப்பீட்டுத்திட்டத்தின்கீழ், பயனடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

70 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கும் இந்த காப்பீட்டுத் திட்டம் அண்மையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

புற்றுநோய், சர்க்கரை மற்றும் ரத்தக்கொதிப்பு உள்ளிட்ட பல்வேறு நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் வகையில், ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுகாதார மற்றும் நல்வாழ்வு மையங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

சாமானிய மக்கள் பயனடையும் வகையில் உயர்தரத்திலான மருந்துகளை குறைந்த விலையில் வழங்கக்கூடிய வகையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் மருந்தகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

கர்ப்பிணி பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தடுப்பூசி குறித்த தரவுகளை அறிந்துகொள்ளும்வ கையில் தனித்துவமான டிஜிட்டல் நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

தொலைபேசி வழி மருத்துவ சேவை மூலம், தொலைதூர பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கும் மருத்துவ ஆலோசனைகள் கிடைத்து வருவதாக அவர் தெரிவித்தார்.

சிறந்த மருத்துவ சேவைக்கான நடைமுறைகளை உலகில் உள்ள நாடுகளுடன் பகிர்ந்துகொள்ள இந்தியா தயாராக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த ஆண்டு நடைபெறவுள்ள சர்வதேச யோகா தினத்தில் ஒரே பூமி – ஒரே சுகாதாரம் என்ற கருப்பொருளில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சர்வதேச யோகா தினத்தையொட்டி நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்கேற்குமாறு அனைத்து நாடுகளுக்கும் அவர் அழைப்பு விடுத்தார்.

உலகில் உள்ள அனைத்து மக்களுக்கும் ஆரோக்கியம், மகிழ்ச்சி மற்றும் நோயற்ற வாழ்க்கை கிடைக்க வேண்டும் என்று வேதங்களும், துறவிகளும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே வலியுறுத்தி வந்துள்ளதை திரு நரேந்திர மோடி சுட்டிக்காட்டினார்.

<<<<<>>>>>

பொருளாதார வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் வர்த்தக சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

புதுதில்லியில் வணிக போட்டி ஆணையத்தின் 16-ஆவது ஆண்டு தின விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், சந்தை வாய்ப்புகளை மேம்படுத்துவதுடன் வர்த்தக போட்டிகளை எதிர்கொள்ள உதவிடும் வகையில் இந்த சீர்திருத்த நடவடிக்கைகள் அமையும் என்று தெரிவித்தார்.

ஒழுங்குமுறை நடவடிக்கைகளுக்கான அனுமதி வழங்குவதில் ஏற்படும் காலதாமதம் வர்த்தக நடவடிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று கூறினார்.

வர்த்தக போட்டிகளை எதிர்கொள்வதில் வணிக போட்டி ஆணையம் திறம்பட செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டும் வகையில், பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

<<<<<>>>>>

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரியில் இன்று தனியார் கல் குவாரியில் பாறை மற்றும் மண் சரிந்து விழுந்த விபத்தில் ஐந்து பேர் உயிரிழந்தனர்.

இதுகுறித்து, முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், இந்த துயர சம்பவம் தமக்கு மிகுந்த மனவேதனை அளிப்பதாக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

சம்பவம் நிகழ்ந்த இடத்தில் மீட்பு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா நான்கு லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும் நிவாரண உதவி வழங்க முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் வீடுகளுக்கான மின்கட்டணத்தை உயர்த்துவதற்கான உத்தேசம் ஏதுவும் இல்லை என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், மின்கட்டண உயர்வு குறித்து ஊடகங்களில் வெளியான செய்திகள் அதிகாரப்பூர்வமற்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்கட்டண உயர்வு குறித்து எந்தவித அறிவிப்பும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் இதுவரை வெளியிடப்படவில்லை என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

ஏற்கனவே நடைமுறையில் உள்ள அனைத்து இலவச மின்சாரச் சலுகைகளும் தொடரும் என்றும் அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது

<<<<<>>>>>

பெண் கல்வியில் தமிழகம் நாட்டிலேயே முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்று கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கே ஆர் பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் அரசு மகளிர் கலைக்கல்லூரியில் 2 கோடியே 45 லட்சம் ரூபாய் செலவில் ஆறு புதிய வகுப்பறை கட்டிடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டி அவர் பேசினார்.

உயர்கல்வி பயிலும் பெண்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையில் மாநில அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான துறைகளில் சிறப்பு கவனம் செலுத்தி திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.

கல்வி மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில், மாநில அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

தென்மேற்கு பருவமழை அடுத்த சில நாட்களில் தொடங்குவதற்கான சூழல் நிலவுவதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று எமது செய்தியாளரிடம் பேசிய அவர், அடுத்த 24 மணிநேரத்தில் தமிழகத்தின் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 56 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் பல்வேறு மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் இன்று திறந்துவைத்தார்.

------------------

தருமபுரியில் முன்னாள் ராணுவ வீரர்கள் சார்பில் ஆபரேஷன் சிந்தூர் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

---------

நாமக்கல் மாவட்டதில் நடைபெற்ற நகைக்கடை உரிமையாளர்களுக்கான விழிப்புணர்வு கூட்டத்தில், சந்தேகத்திற்கிடமான பழைய நகைகளை நகை வியாபாரிகள் வாங்க வேண்டாம் என்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு ராஜேஷ் கண்ணன் அறிவுறுத்தியுள்ளார்.

-------------

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் 2 ஆயிரம் மெட்ரிக்டன் நெல் மூட்டைகள் அரசு அரிசி ஆலைகளுக்கு அரவைக்காக அனுப்பிவைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

----------------

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் உரிமம் இல்லாமல் செயல்பட்டு வந்த கடைகளுக்கு மாநகராட்சி அதிகாரிகள் சீல் வைத்தனர்.

----------------

பெரம்பலூர் மாவட்டம் குன்னம் வட்டத்துக்கு உட்பட்ட கிராம ஊராட்சிகளில் உங்களை தேடி உங்கள் ஊரில் திட்ட முகாம் நாளை நடைபெறுகிறது.

------------

திருவண்ணாமலை மாவட்டத்தில் பெய்துவரும் தொடர் மழை காரணமாக தென்பெண்ணை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

--------------

திருச்செந்தூர் கோவில் வளாகத்தில் புதிதாக திறக்கப்பட்ட மூன்று ஏ டி எம் இயந்திரங்கள் இன்று பக்தர்களின் பயன்பாட்டிற்கு வந்தது.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை இளையோர் துப்பாக்கிச்சுடும் போட்டியில், இந்தியாவின் Adriyan Karmakar வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஜெர்மனியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் 50 மீட்டர் ரைபிள் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

-------------

தென்கொரியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Rutuja Bhosale - தென்கொரியாவின் 'Sohyun Park இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-2, 6-3 என்ற செட் கணக்கில், தென்கொரியாவின் 'Gaeul Jang - 'ஜப்பானின் 'Ena Koike இணையை வென்றது.

----------------

மலேசியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Mrunmayee Deshpande – Prerana Alvekar இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

கோலாலம்பூரில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 21-19, 19-21, 21-13 என்ற செட் கணக்கில், இந்தியாவின் 'Vaishnavi Khatkekar – Alisha Khan இணையை வென்றது.

-----

ஐபி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று சென்னை அணி – ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது. தில்லியில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

<<<<<END>>>>>